# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

### பிரிவு 12 ( 2007 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 17)

## விவிலிய வினாவிடைப் போட்டி

1. கத்தோலிக்க திருவிவிலியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டநூல்களின் எண்ணிக்கை ? **73**
2. பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? **46**
3. சாமுவேல் யாரை திருப்பொழிவு செய்தார்? **தாவீது**
4. திருப்பொழிவு செய்த போது தாவீதின் வயது என்ன? **30**
5. தாவீதின் தந்தை பெயர் என்ன? **ஈசாய்**
6. சவுலின் மகனின் பெயர் என்ன? **யோனத்தான்**
7. சவுலின் மனைவி பெயர் என்ன? **அசினோவாம்**
8. சவுலின் புதல்வியர் பெயர் என்ன? **மேராபு, மீக்கால்**
9. கோலியாத்து எந்த நகரைச் சார்ந்தவன்? **காத்து**
10. தாவீது கோலியாத்துடன் போரிட எடுத்துக்கொண்ட கூழாங்கற்கள் எத்தனை? **5**
11. சவுலின் புதல்வர்களது எலும்பை எந்த மரத்தடியில் புதைத்து வைத்தனர்? **தமரிஸ்கு**
12. இஸ்ராயேலர் சாமுவேல் இறந்ததும் அவரை எந்த இடத்தில் அடக்கம் செய்தனர்? **இராமாவில்**
13. சவுலுக்கு பயந்து தாவீதும் சாமுவேலும் எந்த இடத்தில் ஒளிந்து கொண்டனர்? **நாபோத்து**
14. யோனத்தான் தாவீதை எந்த கல்லருகே ஒளிந்திருக்க சொன்னான்? **ஏசெல்கல்**
15. தாவீது சவுலுக்கு பயந்து எந்த குகைக்குள் தப்பி ஓடினான்? **சீபு**
16. சவுலை அடக்கம் செய்தது யார்? **யாபேசு, கிலயாது**
17. யோனத்தான் மகன் பெயர் என்ன? **மெபிபோசேத்து**
18. தாவீதுக்கு இறைவாக்கு உரைத்தவர் யார்? **நாத்தான்**
19. தாவீதின் சகோதரன் பெயர் என்ன? **சிமியா**
20. தாவீதுக்கும் பத்சேபாவுக்கும் பிறந்த மகன் பெயர் என்ன? **சாலமோன்**
21. சாமுவேல் சவுலைப் பார்த்து பலியை விட எது சிறந்தது என்றார்? **கீழ்ப்படிதல்**
22. நகோமியின் கணவர் பெயர் என்ன? **எலிமலேக்கு**
23. நகோமி, எலிமலேக்கின் பிள்ளைகள் பெயர் என்ன? **மக்லோன், கிலியோன்**
24. மக்லோன், கிலியோன் இருவரும் எந்த நாட்டு பெண்களை திருமணம் செய்தனர்? **மோவாபு நாட்டுப் பெண்களை**
25. நகோமியின் மருமக்கள் பெயர் என்ன? **ஓர்பா, ரூத்**
26. நகோமியை விட்டுப்பிரியாது நகோமியுடன் தங்கிய மருமகள் பெயர் என்ன? **ரூத்**
27. ''நிறைவுடன் இங்கிருந்து சென்றேன், ஆண்டவர் வெறுமையாய் திரும்பி வரச்செய்தார்'' என்று சொல்லி தன்னை எப்படி அழைக்கச்சொன்னார்? **மாரா**
28. எரிமலேக்கின் உறவினர் பெயர் என்ன? **போவாசு**
29. ரூத்து வயலிலிருந்து எத்தனை படி வாற்கோதுமைகளை எடுத்துச் சென்றார்? **20 படி**
30. ஒபேதுவின் மகன் பெயர் என்ன? **ஈசாய்**
31. போவாசுக்கும் ரூத்துக்கும் பிறந்த மகன் பெயர் என்ன? **ஓபேசு**
32. போவாசு ஊர்ப்பெரியவர்களில் எத்தனை பேரை அழைத்தார்? 10
33. இஸ்ராயேலர் கொடுக்கல் வாங்கல் நடைபெறும் போது எடுக்கும் முடிவை உறுதிப்படுத்த என்ன செய்வார்கள்? **தம் காலணிகளை கழற்றி மற்றவரிடம் கொடுத்து விடுவர்**
34. நீதி தலைவர்களில் இறுதியாக வந்தவர் யார்? **சாமுவேல்**
35. இஸ்ராயேலின் முதல் அரசன் யார்? **சவுல்**
36. சிறுவயதில் இறைவனால் பேரரசராக உயர்த்தப்பட்டவர் யார்? **தாவீது**
37. சாமுவேலின் பெற்றோர் யார்? **எல்கானா, அன்னா**
38. அன்னா தான் பெற்றெடுத்த மகனுக்கு ''ஆண்டவரிடமிருந்து கேட்டேன்'' என்று கூறி குழந்தைக்கு என்ன பெயர் இட்டாள்? **சாமுவேல்**
39. தம்மில் பற்றுக்கொண்டோர் காலடிகளை அவர் காப்பார் என்று சொல்லி வேண்டியது யார்? **அன்னா**
40. ஆண்டவர் முன் ஊழியம் செய்த சிறுவன் சாமுவேல் அணிந்திருந்த சிற்றாடை எந்த பட்டு நூலில் செய்யப்பட்டது?**நார்ப்பட்டு**
41. ஏலியின் பிள்ளைகள் சந்திப்பு கூடார வாயிலின் என்ன பாவம் செய்தனர்? **சந்திப்பு கூடார வாயிலில் ஊழியம் செய்ய வந்த பெண்களிடம் தகாத உறவு கொண்டனர்**

42. கடவுள் சாமுவேலை அழைத்த போது சாமுவேல் எங்கு படுத்திருந்தான்? **கடவுளின் பேழை வைக்கப்பட்டிருந்த ஆண்டவரின் இல்லத்தில்**
43. கடவுள் சாமுவேலை எத்தனை தடவை அழைத்தார்? **4**
44. ஏலி இறக்கும் போது அவரின் வயது எத்தனை? **98**
45. ஏலி எத்தனை வருடம் இஸ்ராயேலருக்கு நீதித்தலைவராக இருந்தார்? **40**
46. கடவுளின் உடன்படிக்கைப் பேழை பெலிஸ்தியரின் நாட்டில் எத்தனை மாதம் இருந்தது? **7**
**47.** இயேசுவின் இறுதி இரா உணவை கிறிஸ்தவர்கள் நாம் நினைவு கூர்வது எப்போது? **புனித வியாழன்று.**
48. முதல் முறையாக அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்து கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து பழைய ஏற்பாட்டு காலக்குரு யார்? **மெல்கிசேதேக்.**
**49.** புதிய உடன்படிக்கையில் மனிதருக்கும் இறைவனுக்குமிடையில் உறவை வளர்க்கும் உன்னத குரு? **இயேசு கிறிஸ்து.**
50. இஸ்ராயேலர் தமது எகிப்தில் அடிமைத்தனத்தையும் அதிலிருந்து வெளியேறியதையும் நினைவு கூர கொண்டாடிய விழா எது? **பாஸ்கா விழா.**
**51.** திருத்தந்தை பிரான்சிஸ் இன்று எத்தனையாவது திருத்தந்தையாக இருக்கின்றார்? **266 வது திருத்ததை.**
52. திருத்தந்தை பிரான்சிஸ் எப்போது திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்டார்? **2013 பங்குனி 13ல்.**
**53.** திருத்தந்தை பிரான்சிஸ் எந்த சபையில் இயேசுவிற்காக தனது வாழ்வை அர்ப்பணித்தார்? **இயேசு சபையில்.**
54. திருத்தந்தை பிரான்சிசின் இயற்பெயர் என்ன? **ஜோர்ஜ் மாரியோ பர்கோலியோ.**
55. சவுல் யாரிடம் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார்? **அனனியாவிடம்.**
56. பிற இனத்தவரின் திருத்துாதர் எனப்படுபவர் யார்? **புனித பவுல்.**
57. திரு அவையின் முதல் மறைசாட்சி யார்? **ஸ்தேவான்.**
58. ‘‘எப்பத்தா’’ என்பதன் பொருள் என்ன? **திறக்கப்படு**
59. இயேசு சிலுவை சுமந்த போது எத்தனை தடவை கீழே விழுந்தார்? **3**
60. மாற்கு நற்செய்தியாளரின் அடையாளம் (சின்னம் ) என்ன?**சிங்கம்**
61. நற்செய்தி நூல்களில் முதன் முதலில் எழுதப்பட்ட நற்செய்தி எது? **மாற்கு**
62. ‘‘நான் உங்களுக்கு தண்ணீரால் திருமுழுக்கு கொடுக்கின்றேன், அவரே உங்களுக்கு தூய ஆவியால் திருமுழுக்கு கொடுப்பார்’’ என்று கூறியவர் யார்?**திருமுழுக்கு யோவான்**
**63.** இயேசு திருமுழுக்கு பெற்ற போது வானிலிருந்து ஒலித்த குரல் என்ன கூறியது? **‘‘ என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்.’’**
64. இயேசு அழைத்த முதல் சீடர் யார்? **சீமோன் பேதுரு**
65. பேதுருவின் சகோதரன் யார்? **அந்திரேயா**
66. இயேசு பேதுருவையும், அந்திரேயாவையும் எங்கு கண்டு சீடராக அழைத்தார்? **கலிலேயக் கடற்கரையில்**
67. இயேசுவின் சீடரும், செபுதேயுவின் புதல்வருமானவர்கள் யார்? **யாக்கோபு, யோவான்**
68. இயேசு கப்பர்நகூம் தொழுகைக் கூடத்தில் செய்த புதுமை என்ன? **தீய ஆவி பிடித்தவரை குணப்படுத்தினார்**
**69.** கப்பர் நகூமில் முடக்குவாதமுற்றவரிடம் இயேசு முதலில் என்ன கூறினார்? **‘‘மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன’’**
70. சுங்கச் சாவடியில் வரி வசூலித்தவர், இயேசுவினால் ‘‘என்னைப் பின்பற்றி வா என சீடராக அழைத்தவர் யார்? **மத்தேயு**
**71.** இறைவார்த்தையை கேட்டு, அதன்படி வாழுதல் பற்றி இயேசு கூறிய உவமை எது? **விதைப்பவன் உவமை**
72. இயேசு யாருடைய மகளை உயிர்ப்பித்தார்? **யாயீர்**
73. ‘‘நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே நலம் பெறுவேன்’’ என்று கூறியவர் யார்? **12 ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய பெண்**
74. திருமுழுக்கு யோவானின் உடலை யார் அடக்கம் செய்தார்கள்?**திமுமுழுக்கு யோவானின் சீடர்கள்**
**75.** திருமுழுக்கு யோவானின் தலையை வெட்டி ஒரு தட்டில் தரும்படி அரசனிடம் கேட்டவர் யார்? **ஏரோதியாவின் மகள்**
76. ‘‘ நீர் மெசியா’’ என்ற கூறியவர் யார்? **பேதுரு**
77. இயேசு தோற்றம் மாறும் போது அவருடன் இருந்த சீடர்கள் யாவர்? **பேதுரு, யாக்கோபு, யோவான்**
78. இயேசு தோற்றம் மாறும் போது இயேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தவர்கள் யார்? **எலியா, மோசே**
**79.** இயேசுவின் தோற்றம் மாறும் நிகழ்வில் மேகத்தினின்று ஒலித்த குரல் என்ன கூறியது? **‘‘என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவருக்கு செபிசாயுங்கள்’’**
80. இயேசுவைக் காட்டிக்கொடுத்த சீடர் யார்? **யூதாசு இஸ்கரியோத்து**
81. இயேசுவின் அன்புச் சீடர் யார்? **யோவான்**

**82.** இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் இறைவேண்டல் செய்ய எங்கு சீடரைக் கூட்டிச் சென்றார்? **கெத்சமெனித் தோட்டத்திற்கு**
83. மூன்று முறை இயேசுவை தெரியாது என மறுதலித்த சீடர் யார்? **பேதுரு**
84. "நீ யூதனின் அரசனா?" என்று இயேசுவிடம் கேட்டது யார்? **பிலாத்து**
85. சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோனினின் புதல்வர்கள் யார்? அலெக்சாந்தர், **ரூபு**
86. மாற்கு நற்செய்தியாளர் இயேசுவை சிலுவையில் அறைந்த போது எத்தனை மணி என குறிப்பிடுகின்றார்? **காலை ஒன்பது மணி**
87. பிலாத்துவிடம் இயேசுவின் உடலைக் கேட்டவர் யார்? **அரிமத்தியா ஊர் யோசேப்பு**
**88.** இயேசுவின் உடலுக்கு தைலம் பூசச் சென்றவர்கள் யார்? **மகதலா மரியா, யாக்கோபின் தாய் மரியா, சலோமி**
89. இயேசு உயிர்த்து எத்தனையாம் நாள் விண்ணேற்றம் அடைந்தார்? **40**
**90.** செபமாலையின் போது கூறப்படும் தேவ இரகசியங்கள் எவை? **மகிழ்ச்சியின் தேவ இரகசியம், துக்க தேவ இரகசியம், மகிமையின் தேவ இரகசியம், ஒளியின் தேவ இரகசியம்**
**91.** அன்னை மரியாளின் அமல உற்பவத் திருவிழா திருச்சபையால் எப்போது கொண்டாடப்படுகின்றது? **மார்கழி 8**
92. லூர்து அன்னை திருவிழா எப்போது கொண்டாடப்படுகின்றது? **மாசி 11**
**93.** லூர்து கெபியில் மரியன்னை புனித பெர்னடேத்துக்கு முதன் முதலாக எப்போது காட்சி கொடுத்தார்? **1858 மாசி 11ம் திகதி**
94. அன்னை மரியாவின் பெற்றோர்கள் யார்? **சுவக்கீன், அன்னா**
95. மரியாவின் ஊர் எது? **நாசரேத்து**
**96.** பாத்திமா நகரில் காட்சி கொடுத்த மரியன்னையின் 3 வேண்டுகோள்கள் என்ன? **செபமாலை சொல்ல வேண்டும், மனிதர்கள் மனம் திரும்ப வேண்டும், ஆண்டவரை புண்படுத்தும் செயல்களை மக்கள் நிறுத்த வேண்டும்.**
97. திருச்சபையின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருப்பவர்? **தூய ஆவியார்**
**98.** கத்தோலிக்க திருஅவையின் பண்புகள் யாவை? **ஒருமை, தூய்மை, கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்**
99. திருஅவையை ஏற்படுத்தியது யார்? **இயேசுக்கிறிஸ்து**
**100.** இயேசு திருஅவையை ஏற்படுத்தி அதன் தலைவராக யாரை நியமித்தார்? **திருத்தூதரான பேதுருவை**

## பேச்சுப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

### நற்கருணை

புனிதமிகு நற்கருணை மாண்புமிக்க அருளடையாளம். நம் உடலுக்கு உணவு அவசியமாயிருப்பது போல் நம் ஆன்ம வாழ்வுக்கு தேவநற்கருணை மிக அவசியம். தேவநற்கருணையில் இயேசு முழுமையாக தம் இறைத்தன்மையோடும், உடலோடும், இரத்தத்தோடும், ஆன்மாவோடும் வீற்றிருக்கிறார் என்பது நம் திரு அவையின் நம்பிக்கை பேருண்மைகளுள் ஒன்று.

"இறுதி இராவுணவின் பொழுது நம் ஆண்டவரால் வசீகரம் செய்யப்பட்ட அப்பமும், இரசமும் நமக்காக சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்படவிருந்த அவருடைய உடலாகவும், இரத்தமாகவும் மாறினது போல், குருவால் வசீகரம் செய்யப்படும் அப்பமும், இரசமும் விண்ணுலகில் மாட்சியுடன் வீற்றிருக்கும் கிறிஸ்துவின் உடலாகவும், இரத்தமாகவும் மாறுகின்றன என்று நம்புகிறோம். மறைவான, புனிதமான இந்த மாற்றத்திற்குப் பொருள் மாற்றம் என்று திருஅவை மிகப் பொருத்தமான பெயர் வழங்குகின்றது.

நற்கருணையை நாம் திருப்பலிப் பொருளாக, ஆன்ம உணவாக, நம் உற்ற நண்பராகக் கொள்ளலாம். நன்மை உட்கொள்வதற்கு உகந்த சிறப்பான நேரம் திருப்பலிதான் என்றாலும், அவசியம் ஏற்படின் - முக்கியமாக நோயாளிகள் எந்நேரத்திலும் நற்கருணையை உட்கொள்ளலாம்.

கிறிஸ்தவ நம்பிக்கையாளர்கள் நற்கருணைமீது மாபெரும் மதிப்புக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் புனிதமிகு திருப்பலிக் கொண்டாட்டத்தில் ஈடுபாட்டுடன் பங்கேற்க வேண்டும். இவ்வருளடையாளத்தை மிகுந்த பக்தியுடனும் அடிக்கடியும் பெற வேண்டும். மேலும் மேன்மைமிகு ஆராதனையுடன் அதை வழிபடவேண்டும். ஆன்ம மேய்பர்கள் இவ்வருளடையாளத்தை பற்றிய கோட்பாட்டை விளக்கிஇ இக்கடமைபற்றி நம்பிக்கையாளருக்கு ஆர்வமுடன் கற்பிக்க வேண்டும்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

நீ எந்தன் பாறை என் அரணான இயேசுவே
நீ எந்தன் உள்ளத்தின் அணையாத தீபமே
அணையாத தீபமே இயேசுவே இயேசுவே

ஒளிகொண்டு தேடினால் இருள் நில்லுமோ
உன்துணையில் வாழ்க்கையில் துயர்வெல்லுமோ-2
தடைகோடி வரலாம் உள்ளம் தவித்தோடி விடலாம் -2
ஆனாலும் உன் வார்த்தை உண்டு – எது
போனாலும் உனில் தஞ்சம் உண்டு
இயேசுவே இயேசுவே – 2

இரவுக்கும் எல்லை ஓர் விடியல் அன்றோ
முடிவாக வெல்வதும் நன்மையன்றோ-2
தளராது வாழ்வோம் அருள் அணையாது காப்போம் – 2
என்றென்றும் உன் ஆசி கொண்டு – வரும்
நல்வாழ்வை கண்முன்னே கண்டு
இயேசுவே இயேசுவே -2